பக்கங்கள் 19

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 25 செவ்வாய்க்கிழமை 14.11.2023 அதிர்வு 106

## கிரிக்கெட் விசாரணையில் இருந்து விலகிய நீதியரசர்



இலங்கை கிரிக்கெட் இடைக்கால நிர்வாகத் தின்செயற்பாடுகளைஇடை நிறுத்துவதற்கான இடைக கால உத்தரவு பிறப்பிக் கப்பட்டது

04

# நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு கோட்டா, மஹிந்த, பஸிலே காரணம்!

### ராஜபக்ஷக்களுக்கு எதிராக உயர் நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு





இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக் கடிக்கு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷ, முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உள் ளிட்டோரே காரணமானவர்கள் என்று உயர் நீதி மன்றம் இன்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

04

## சீன ஜனாதிபதியின் விசேட தூதர் இலங்கைக்கு சனியன்று விஜயம்



சீன ஜனாதிபதியின் விசேட தூதுவர் ஷென் ஹிகின் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்று சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

04

## இலங்கைக்கு அருகே இன்று சக்தி வாய்ந்த நில நடுக்கம்!

### ஆபத்து இல்லை என அறிவிப்பு



இலங்கைக்கு அருகே மிகவும் சக்தி வாய்ந்த நில நடுக் கம் இன்று நண்பகல் 12.30 மணியளவில் ஏற்பட்டுள்ளது. இந்து சமுத்திரத்தின் தென்கிழக்கே 800 கிலோமீற்றர் தொலைவில் 10 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த

04

## ரொஷானின் செயற்பாடுகளுக்கு ஆப்பு வைத்தார் ரணில்



சர்வதேசகிரக்கெட்பேரவை யில் இலங்கை கிரிக்கெட் டின் உறுப்புரிமையை மீண் டும் பெறுவதற்கான பேச்சுக் களை நடத்தி நடவடிக்கை களை எடுக்க வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி தலை மையிலான அமைச்சரவை உப குழுவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கீ காரம் வழங்கியுள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் கிரிக்கெட் விடயத்தில் எந்த வொரு இடைக்காலக் குழு நியமனமும் அமைச்சரவை யின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்றும் அமைச்ச ரவை தீர்மானித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் இடைக்காலக் குழு அமைத்த அமைச்சர் ரொஷானின் தீர் மானத்தை மீறி ஜனாதி பதி இந்த அறிவிப்பை விடுத் துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கம்பளை வலய மலசல கூடத்தில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்!

கம்பளை கல்வி வலய அலுவலகத்தின் மலசல கூடத்தில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கம்பளை கல்வி அலுவலகத்தில் பணி உதவியாளராக கடமையாற்றிய கம்பளை ரத்மல்கடுவ பிரதேசத்தை சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் கம்பளை பொலிஸ் நிலையத்தில்



நேற்று மாலை முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி கம்பளை பொலிஸார்விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உறவினர்களால் சடலம் அடையாளம் காணப்பட்டதை அடுத்து கம்பளை மரண விசாரணை அதிகாரியின் உத்தரவின் பேரில் சடலம் பிரேத பரிசோதனைக்காக கம்பளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பொரளை அடுக்குமாடி குடியிருப்பில் தவறி வீழ்ந்த மாணவன் படுகாயம்!

## போதைப் பாவனையால் வந்தது வினை

பொரளை பிரதேசத்தில் அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் இருந்து தவறி விழுந்து படுகாயமடைந்த 16 வயதுடைய பாடசாலை மாணவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் தனது நண்பர்களுடன் வீட்டில் போதைப் பொருள் பயன்படுத்திக் கொண்டிருந்த போது, அவரது தாய் வந்துவிட்டதால் ஜன்னல் வழியாக தப்பிச் செல்ல முயன்றபோது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் உள்ள அரச பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் குறித்த மாணவன், தனது தாய் வீட்டில் இல்லாத நேரத்தில் நண்பர்கள் சிலரை வீட்டுக்கு அழைத்து வந்துள்ளார்.

இவர் தனது நண்பர்களுடன் வீட்டில் போதைப் பொருள் பயன்படுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அப்போது மாணவனின் தாயார் திடீரென வீட்டுக்கு வந்தபோது அவர்கள் தலைமறைவாக முயன்றுள்ளனர். வீட்டின் ஜன்னல் வழியாக வெளியே வந்த மாணவன் சுவர் உதவியால் கீழே இறங்க முயன்றபோது மூன்றாவது மாடிக்கு அருகில் கீழே விழுந்துள்ளார்.

கீழே விழுந்ததில் படுகாயமடைந்த மாணவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தற்போது தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 13 அஞ்சல் நிலையங்கள் 24 மணி நேரமும் சேவையில்!

கொழும்பு மற்றும் களுத்துறையை உள்ளடக்கிய மேல் மாகாண தெற்கில் உள்ள 13 அஞ்சல் நிலையங்கள் 24 மணி நேரமும் திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து விதி மீறல்கள் தொடர்பான அபராதங்களை ஏற்றுக்கொள்வதற்காக இந்த அஞ்சல் நிலையங்கள் இரவிலும் திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு பிரிவின் பிரதி பொலிஸ் மா அதிபர் ,நிந்திக்க ஹப்புகொட இந்தத் தகவலை அறிவித்துள்ளார்.

இதன்படி கொம்பனி வீதி, ஹெவ்லொக் டவுன், வெள்ளவத்தை, பொரளை, கொட்டாஞ்சேனை, பத்தரமுல்ல, நுகேகொட, தெஹிவளை, கல்கிசை, மொரட்டுவ, பாணந்துறை, களுத்துறை மற்றும் சீதாவகபுர போன்ற அஞ்சல் நிலையங்




கள், 7 நாள்களும் 24 மணித் தியாலங்களும் திறந்திருக்கும்.

போக்குவரத்து விதிமீறல்கள் தொடர்பாக வாகன செலுத்துனர்களை சோதனையிடும் போதும், இந்த அஞ்சல் நிலைய சேவைகள் தொடர்பில் போக்குவரத்து பொலிஸார் அறிவிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெண் கான்ஸ்டபிள் பணி இடைநிறுத்தம்

கிரிபத்கொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பயிலுநர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரை குளியலறைக்கு வரவழைத்து, ஒழுக்கமற்ற வகையில் நடந்து கொண்டார் என்ற குற்றச்சாட்டில் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணி இடைநிறுத்தப்பட்டார் என கிரிபத்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

மற்றொரு பொலிஸ் கான்ஸ்டபிள் இந்த கான்ஸ்டபிளையும் பயிற்சி கான்ஸ்டபிளையும் குளியலறையில் பார்த்து இது குறித்து முறைப்பாடு செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக களனி பொலிஸ் அத்தியட்சகர் மேற்கொண்ட விசாரணையையடுத்து நேற்று முதல் இந்த பணித்தடை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி நிறுவனங்களிடம் இனி

# கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு இணையவழி அனுமதி பெறலாம்!

## வடக்கில் நேற்று அறிமுகம்

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு இணையவழி முறையின் மூலம் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் முறை வடமாகாணத்தில் இருந்து ஆரம்பமாகிறது.

முதற்கட்டமாக வடமாகாணத்தில் உள்ள 34 உள்ளூராட்சிநிறுவனங்களில் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டது. விரைவில் நாடளாவிய ரீதியில் உள்ள ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

உலக நகர திட்டமிடல் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம், வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று (13) நடைபெற்ற நிகழ்வில் இந்த முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் பணிப்புரைக்கு அமைவாக இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கட்ட அபிவிருத்தி அனுமதிகளுக்குத் தேவையான அனைத்து அனுமதிகளையும் விரைவாகப் பெறுவதற்கு இந்த அமைப்பு உதவுகிறது.

உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு இந்தத் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் முதன்மை நோக்கம், கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்களை அங்கீரிக்க எடுக்கும் நேரத்தை குறைத்து, எளிமைப்படுத்துவதன் மூலம் அதிக சேவையை வழங்குவதாகும்.

9000 சதுர அடிக்கு மேல் கட்டடங்கள் கட்டுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையால் அனுமதி வழங்கப்படுகிறது. 9000 சதுர அடிக்குக் குறைவாக இருந்தால், சம்மந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களால் ஒப்புதல் அளிக்கப்படும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை தற்போது இணையவழி முறை மூலம் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்களை அனுமதிக்கும் முறைக்கு ஏற்கனவே ஒப்புதல் அளிக்க ஆரம்பித்துள்ளது. இது 2017 இல் தொடங்கப்பட்டது.

இணையவழி மூலம் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கான விண்ணப்பங்களுக்கு அனுமதி அளிப்பதன் மூலம், அதைக் கண்காணிக்க உயர் அதிகாரிகளுக்கு அனுமதி வழங்க முடியும்.

வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதன் மூலம் மோசடி மற்றும் ஊழலை குறைக்க முடியும் என்று நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

வடமாகாண சபையின் பிரதம செயலாளர் சமன் பந்துலசேன, நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, வடமாகாண அலுவலக பணிப்பாளர் டி.பி.எஸ்.கே. திஸாநாயக்க, பிரதிப் பணிப்பாளர் கே. ஜீவகன் மற்றும் அரச அதிகாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## மன்னார் மாவட்டத்தில் மக்களை அச்சுறுத்தும் வகையில்

# கனிய மணல் அகழ்வு நிறுத்தப்பட வேண்டும்!

## வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவிப்பு

(மன்னார் நிருபர் )

மன்னார் மாவட்டத்தில் மக்களை அச்சுறுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் கனிய மணல் அகழ்வு குறித்தும் கனிய மண் அகழ்வை நிறுத்த அரசு மற்றும் உரிய அமைப்புக்களும் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (14) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு –

மன்னார் மாவட்டம் முகம் கொடுக்கும் பிரச்சினையாக கனிய மணல் அகழ்வு காணப்படுகின்றது. காற்றாலை மின்சாரம் அதற்கு அப்பால் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் சடுதியாக கனிய மணல் அகழ்வு அல்லது கனிய



மணல் கொள்ளை விடயத்தில் அரசு முனைப்பு காட்டுகிறது.

மன்னாரில் அண்மையில் சுமார் 13 இற்கும் மேற்பட்ட அரச திணைக்களங்கள் வருகை தந்து கனிய மணல் அகழ்வுக்கான செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் இடம்பெற்றுள்ளன.

இதனால் இந்தத் திட்டம் எவ்வளவு வலுவானது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

இந்தத் திட்டத்தை ஆராயும் போது மணல் மாத்திரமா ? அல்லது வேறு ஏதும் கொள்ளைகள் இருக்கிறதா? என்பதை சிந்திக்க தோன்றுகிறது.

இங்கிருக்கும் சாதாரண அதிகாரிகளுக்கும் தெரியாமல் இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது. குறிப்பாக மேல் மட்டத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட சில திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அதிகாரிகள் ஊடாக அது திணிக்கப்பட்டு இன்று மக்களின் வாழ்விடத்துக்குள் அது ஊடுருவி மண்ணை அகழ்வதற்காக வருகை தந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் கடந்த வாரம் மன்னார் மாவட்டமே கிளர்ந்து எழுக் கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றது. இது ஒரு பெரிய பிரச்சினையாக இந்த மன்னார் மக்கள் எதிர் கொள்கின்றார்கள்.

இந்த மணல் அகழ்வால் மன்னார் தீவே பாதிக்கக் கூடிய ஒரு நிலைமை ஏற்படும் என்று மக்கள் அச்சப்படுகின்றனர். எனவே அரசு அல்லது இது சார்ந்து செயற்படுகின்ற அமைப்புகள் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.–என்றார்.









இந்துக்களின் முக்கிய விரதங்களில் ஒன்றாகிய கந்தசஷ்டி விரதம் இன்று ஆரம்பமானது. யாழ்ப் பாணம் நல்லூர் கந்த சுவாமி ஆலயத்திலும் கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற் றன. இதன்போது முருகப் பெருமான் வெள்ளி ரிஷ பத்தில் வீதி உலா வந்தார். **(படங்கள்:- பிரபாகரன் டிலக்சன்)**

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## சீன ஜனாதிபதியின்...

இரு நாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் சனிக்கிழமை சீன ஜனாதி பதியின் விசேட தூதுவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்று சீன வெளிவிவகார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

## நாட்டின் பொருளாதார...

மேலும், இவர்கள் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளனர் என்றும் அந்தத் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஸ்மன், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். ஆர்டிகலா, முன்னாள் ஜனாதி பதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை உறுப்பினர்கள் ஆகியோரும் அடிப்படை உரிமைகளை மீறியுள்ள னர் என்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாமால் மேற் கொள்ளப்பட்ட விசாரணையின் பிரகா ரம் ராஜபக்ஷக்களுக்கு எதிரான தீர்ப்பு வழங்கபட்டுள்ளது.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன உள்ளிட்ட குழுவினர், நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிக்குப் பொறுப்புக்கூற வேண்டிய வர்கள் தொடர்பில் விசாரணை மேற் கொள்ளப்பட வேண்டும் எனக் கோரி இரண்டு அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த மனுக்களை விசாரித்த, ஐவர டங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாமின் பெரும்பான்மையான நீதியர சர்களின் தீர்மானத்துக்கமைய இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், பிரதிவாதிகள் இழப்பீடு வழங்க வேண்டியதில்லை என்று உயர் நீதிமன்றம் தீர்மானித் துள்ளது. இருப்பினும் மனுதாரர்களுக் குத் தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவைச் செலவுத் தொகையாக வழங்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான முர்து பெர்னாண்டோ, புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர் தன மற்றும் விஜித் மலல்கொட ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு இடம்பெற்றது.

## கிரிக்கெட் விசாரணையில்...

தொடர்பான விசாரணையில் இருந்து மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன இன்று விலகியுள்ளார்.

இந்த வழக்கு தொடர்பில் விளையாட் டுத்துறை அமைச்சரினால் தாக்கல் செய்யப்பட்ட மனு அழைக்கப்பட்ட போதே, அவர் இந்தத் தீர்மானத்தை அறிவித் துள்ளார்.

அண்மைய நாட்களில் விளையாட்டுத் துறை அமைச்சர், சில அமைச்சரவை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நியாயமற்ற விமர்சனங் கள் காரணமாக இந்த விசாரணையில் இருந்து விலகத் தாம் தீர்மானித்தார் என்று தலைமை நீதியரசர் நிஷங்க பந்துல கருணாரத்ன அறிவித்துள்ளார்.

அதன்படி, இந்த மனு தொடர்பான விசாரணையை வேறு நீதியரசர்கள் ஆயத் துக்கு மாற்றத் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

## இலங்கைக்கு அருகே...

நில நடுக்கம் பதிவாகியுள்ளது என்று புவிசரிதவியல் மற்றும் கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

நில நடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவாகியுள்ளது என்றும், எனினும் சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை என்றும் புவிசரித வியல் மற்றும் கட்டட ஆராய்சி நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இதனால் இலங்கைக்கு எவ்வித ஆபத்தும் இல்லையென புவிசரித வியல் மற்றும் கட்டட ஆராய்ச்சி நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.



# காசாவில் போரை நிறுத்துமாறு கோரி ஐ.நா. அலுவலகத்தில் மகஜர் கையளிப்பு!

(நூருல் ஹுதா உமர்)

பாலஸ்தீன், காஸாவில் மனிதாபிமானமற்ற முறையில் இஸ்ரேல் முன்னெடுத்து வரும் மனித படுகொலையையும், கொடூர தாக்குதல்களையும் உடனடியாக நிறுத்த ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தலையிட வேண்டும்.

இவ்வாறு கோரிக்கை முன்வைத்து இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள் 159 பேர் கையெழுத்திட்டு மகஜர் ஒன்று கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் இன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹறீஸ், அனுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்தனர்.

இஸ்ரேல், பலஸ்தீனத்தில் மனிதாபிமானமில்லாத வகையில் முன்னெடுத்து வரும் மனித படுகொலையையும், கொடூரத் தாக்குதல்களையும் உடனடியாக தடுத்து நிறுத்தி அமைதியையும், சமாதானத்தையும் நிலைநிறுத்த ஐ.நா. பாதுகாப்பு சபை தலையிட வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தே இந்த மகஜர் தாயாரிக்கப்பட்டுள்ளது.

இதில் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஸ, மைத்திரிபால சிரிசேன, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உட்பட கட்சி தலைவர்கள், முன்னாள், இந்நாள் அமைச்சர்கள், சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் இன பேதங்களுக்கு அப்பால் கையெழுத்திட்டுள்ளனர்.






இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு அதிகமானோர்களின் கையெழுத்துடன் தயாரிக்கப்பட்ட இந்த மகஜர் இன்று முற்பகல் 11 மணியளவில் கொழும்பில் அமைந்துள்ள ஐ. நா. அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்ட முதுமாணி ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான றிசாட் பதியுதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹறீஸ், அனுராதபுர மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான், நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ. எச். எம். பௌசி, எம். எஸ். தௌபிக் உட்பட இந்நாள் மற்றும் முன்னாள் எம்.பிக்கள், பிரமுகர்களின் பிரசன்னத்துடன் ஐ.நா. அதிகாரிகளிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வெற்று அறிவிப்பு

வெளியே இனிப்பு மூலம் பூசப்பட்ட உப்புச் சப்பற்ற சரக்கைத் தனது வரவு - செலவுத் திட்டமாக முன் வைத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஆட்சி அதிகாரத்தை அவர் பொறுப்பேற்று ஒன்றேகால் ஆண்டு தாண்டியும் காத்திரமான பொருளாதார மேம்பாடு அவரது ஆட்சியில் ஏற்படவில்லை.

அவர் பதவியைப் பொறுப்பேற்ற போது இருந்த - கழுத்தை நெரிக்கும் - நெருக்குவாரங்கள் ஓரளவு தணிந்தமையைத் தவிர, நாடு எதிர்பார்த்த மேம்பாட்டை பெறவே இல்லை என்பது வெளிப்படையானது.

வெறுமனே வாழ்க்கைச் செலவுப் படி (அலவன்ஸ்) பத்தாயிரம் ரூபாவைக் கூட்டி இருக்கிறார் என அவர் பம்மாத்துக் காட்டுகின்றாரே தவிர, வேறொன்றும் உருப்படியாக அந்த வரவு - செலவுத் திட்டத்தில் இல்லை. அந்த அறிவிப்புக் கூட கானல் நீர் போன்றே தோன்றுகின்றது. அந்த அறிவிப்புப் பிரகாரம் அரச ஊழியருக்கு அந்தக் கொடுப்பனவு கைக்கு வர ஆறு மாதங்கள் எடுக்கப் போகின்றது.

தனியார் துறை ஊழியர்கள், சொந்தத் தொழில் செய்வோரின் நிலைமை இதில் கணக்கில் எடுக்கப்படவில்லை.

இப்போது காட்டப்படும் இந்த அலவன்ஸ் அதிகரிப்புக் கூட கடைசியாக 2016 இல் கிட்டிய சம்பள உயர்வுக்குப் பின்னர் ஏழு ஆண்டுகள் கடந்து கிட்டும் சொற்ப உதவிதான்.

அரசு ஊழியர்கள் இருபதாயிரம் ரூபா நேரடியாகச் சம்பள உயர்வு வேண்டுமென்ற போராடினார்கள். யானைப் பசிக்கு சோளப் பொறி எறிந்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில்.

இதற்கிடையில், இந்த வரவு - செலவுத் திட்டத்தில் காட்டப்படாமலேயே வரி அதிகரிப்பு உச்சத்துக்கு எகிறி விட்டது.

பெறுமதி சேர் வரி என்ற வற் வரி மட்டும் வரும் ஜனவரியில் 18 வீதமாக உயர்கின்றது. அது, நாட்டில் உள்ள எல்லோரினதும் பக்கெட்டுக்களையும் சூறையாடப் போகின்றது என்பது புரிந்து கொள்ளத் தக்கது.

இந்த வற் வரி அதிகரிப்பால் ஜனவரியிலிருந்து பெட்ரோல், டீசல், நிலக்கரி போன்ற எரி பொருள்களின் விலை மட்டும் 11 வீதத்தால் உடனே உயரும்.

பிறகு என்ன? எல்லா பொருள்களின் விலைகளும் ஜனவரியில் கட்டுமட்டின்றி எகிறுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

ஆக, மக்களின் சட்டைப் பைகளில் இருந்து இரண்டு, மூன்று மடங்காகச் சூறையாடிப் பிடுங்கி விட்டு, ஏதோ அவர்களுக்குத் தாராளம் செய்வது போல பிச்சை போடுகின்றார் நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

வரவு - செலவுத் திட்டம் என்பது பசப்பு வார்த்தைகள் அடங்கிய வெற்று அறிக்கைகள் எனக் கருதும் நிலைமை இப்போது வந்துவிட்டது.

2023 ஆம் ஆண்டுக்காக கடந்த ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவு திட்டத்திலும், அதற்கு முந்திய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்திலும் கூட நிறைவேற்றப்பட முடியாத பல கற்பனைத் திட்டங்கள் வெற்றிகரமாக அறிவிக்கப்பட்டன. ஆனால் அவை பெரும்பாலும் நடைமுறைக்கு வரவே இல்லை.

அதே வரிசையில்தான் இப்போதைய வரவு - செலவுத் திட்டமும் வந்திருப்பதாக விமர்சகர்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

அந்த வகையில் பார்த்தால் இது வெற்று அறிவிப்பு பட்ஜெட்தான்!

# வடக்கு ஆளுநர் - ஜப்பான் தூதர் சந்திப்பு





வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் ஜப்பான் தூதுவர் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு வெள்ளிக்கிழமை (10) கொழும்பில் உள்ள ஜப்பான் தூதுவரின் இல்லத்தில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் வடமாகாணம் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. ஜப்பான் அரசின் சார்பில், வடபகுதியின் வளர்ச்சிக்கு முழு ஒத்துழைப்பு தொடர்ந்தும் வழங்கப்படும் என்று தூதர் உறுதி அளித்தார்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

“காடு நம் தாய். தாயிடத்தில் பால் குடிக்கலாமே தவிர, நாம் அவளின் இரத்தத்தையே உறிஞ்சிவிடக்கூடாது.”

-தமிழகக் கவிஞர் அறிவுமதி



# அரச ஊழியர்கள் எதிர்பார்த்திருந்த சம்பள அதிகரிப்புக் கிடைக்கவில்லை!

## அரச பொதுச் சேவைகள் சங்கம் கவலை

(அஸ்ஹர் ஆதம்)

அரச ஊழியர்களுக்கு எதிர்பார்த்த சம்பள அதிகரிப்பு வழங்கப்படவில்லை என்று அரச பொதுச் சேவைகள் சங்கம் கவலை தெரிவித்துள்ளது.

20 ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பை எதிர்பார்த்து கொண்டிருந்த அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பளம் அதிகரிப்பை அதுவும் தவணை அடிப்படையில் வழங்குவதற்கான முன்மொழிவை சமர்ப்பித்துள்ளமையானது யானைப் பசிக்கு சோளப்பொரி போட்ட கதையாகும்.

இவ்வாறு இலங்கை அரச பொதுச் சேவைகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஏ புஹாது தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில் அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது–

தற்போது நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டுக்கான பாதீட்டு முன்மொழிவுகளின் பிரகாரம் அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு கொடுப்பனவானது ஏப்ரல் மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான இந்தக் கொடுப்பனவு தவணை அடிப்படையில் வழங்கப்பட உள்ளமை ஒரு ஏமாற்று வித்தையாகும்.



2023 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து வைத்து நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் இதே நிதி அமைச்சரான ரணில் விக்கிரமசிங்க 2023 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் அரச ஊழியர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகளை வழங்கப் போவதாகத் தெரிவித்திருந்தார்.

இருந்தபோதும் 2023 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கால பகுதியும் நிறைவடையும் தறுவாயில் அடுத்த வரவு, செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து மீண்டும் ஒரு மாயாஜால குண்டை தூக்கிப் போட்டுள்ளார்.

ஏப்ரல் முதல் பத்தாயிரம் ரூபா சம்பளம் அதிகரிப்பு வழங்கப்படும் என்று மார்ச் மாதம் தேர்தலை எதிர்பார்த்திருக்கின்ற இந்த அரசு ஏப்ரலில் அதிகரித்த சம்பளத்தை வழங்கப் போவதாக கூறுவதை நம்பி ஏமாந்து போவதற்கு இனியும் அரச ஊழியர்கள் தயாராக இல்லை.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்ட முன்மொழிவைப் போன்ற ஒரு ஏமாற்று வித்தயா என்று சந்தேகிக்க தோன்றுகின்றது.

இன்று நாளுக்கு நாள் அத்தியாவசிய பொருடள்களுக்கான விலைவாசி அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. வாழ்க்கைச் செலவு மலைபோல் உயர்ந்துள்ளது.

இந்த நிலையில் 10 ஆயிரம் ரூபாவை வாழ்க்கைச் செலவு படியாக அதிகரித்து விடுவதன் மூலம் அரச ஊழியர்களை நெருக்கடியான பொருளாதார சூழ்நிலையிலிருந்து வெளியேற்ற முடியாது.

இந்த சம்பள உயர்ச்சி வாழ்வாதார பிரச்சினையில் இருந்து சிக்கித் தவிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஒரு போதும் நிவாரணமாக அமையப் போவதில்லை.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கட்டுப்பட்டுக்குள் கொண்டு வந்து, மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலைமைக்கு பொருளாதார ரீதியாக உரிய தீர்வை பெற்றுக் கொடுக்காதவரை சம்பள உயர்வு அர்த்தமற்றதாகிறது.

எனவேதான் தற்போது விடுத்துள்ள பத்தாயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு முன்மொழிவுக்கு மேலதிகமாக அரச உத்தியோகத்தர்களுக்கு, தற்போதைய விலைவாசி அதிகரிப்புக்கு ஏற்ப வாழ்க்கைச் செலவு சுட்டெண் கணிப்பிடப்பட்டு அதன் விகிதாசாரத்துக்கு ஏற்ப ஈடு கொடுக்கும் வகையில் வாழ்க்கைச் செலவுப் படியையும் அதிகரிக்க அரச் நடவடிக்கை எடுக்க வேண்டும்.– என்றுள்ளது.

# மாமரத்தை வீழ்த்திய யானை!

( வி.ரி.சகாதேவராஜா)

பாரிய மாமரம் ஒன்றை அடியோடு முறித்து வீழ்த்தியது காட்டு யானை.

இந்தச் சம்பவம் சம்மாந்துறையை அடுத்துள்ள கந்தன் வெளி வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

காரைதீவைச் சேர்ந்த இராஜநாயகம் ரமேஷ் என்பவரின் கந்தன்வெளி வயலில் இருந்த பாரிய மாமரமே முறித்து வீழ்த்தப்பட்டது.

அத்தோடு அவரது விதைக்கப்பட்ட வயலும் யானை திரிந்ததால் சேதத்துக்குள்ளானது.

இவ்வாறு காட்டு யானையின் அட்டகாசம் தினமும் அந்த பகுதியிலே தொடர்ந்து கொண்டிருக்கின்றது. விவசாயிகள் அச்சத்துடன் விதைப்பில் ஈடுபட வேண்டி இருக்கின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.










# கலைஞர்களுக்குப் பயிற்றுவிப்பு!

(ஹஸ்பர்)

இலங்கை வானொலி முஸ்லிம் சேவை நாடகங்களில் பங்கு கொள்ளும் கலைஞர்களுக்கான பயிற்றுவிப்பு செயலமர்வு நேற்று (13) இலங்கை ஒலிபரப்புக் கூட்டு தாபன பயிற்சி மையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறியானது கதை வசனங்கள் பாத்திரங்களின் ஊடாக வானொலி நாடகத்தை வெளிக்கொண்டு வரல் என்ற தொனிப் பொருளில் மூன்று நாள்களைக் கொண்ட பயிற்சி நெறியாக நடைபெறவுள்ளது.

பயிற்சி திட்டத்தில் 34 கலைஞர்கள் பங்குபற்றுகின்றனர். பிரதான வளவாளராக கலாநிதி ரஸ்மின் கலந்து கொண்டார். பயிற்சித் திட்டத்தில் கலந்து கொள்ளும் களைஞர்களுக்கு தொடர்ச்சியாக முஸ்லிம் சேவை நாடகங்களில் பங்குகொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும் என முஸ்லிம் சேவையின் பணிப்பாளர் திருமதி பாத்திமா றினூசியா தெரிவித்தார்.

# பொத்துவில் பிரதேச செயலர் பிரிவில் தாக்கப்பட்ட கிராமசேவகர் ஆஸ்பத்திரியில்!

## தாக்கியவரைக் கைது செய்யக்கோரி போராட்டம்

(அஸ்ஹர் ஆதம்)

பொத்துவில் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் பொத்துவில் களப்புக்கட்டு கிராமத்தில் சேவையாற்றி வந்த கிராமா உத்தியோகத்தர் எம்.ஐ.எம். றாபி கிராமவாசி ஒருவரால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து பொத்துவில் கிராம பிரிவுகளில் கடமையாற்றும் ஏனைய கிராம சேவை உத்தியோகத்தர்கள் தாக்கியவரை கைது செய்யுமாறு கோரி பொத்துவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் நேற்று (13) ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட கிராம சேவகர்கள் கருத்துத் தெரிவிக்கையில்–

அம்பாரை பொத்துவில் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் பொத்துவில் களப்புக்கட்டு கிராமத்தில் சேவையாற்றி வந்த எமது சக உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.றாபி , அவர் கடமையாற்றிய கிராமத்தில் வசித்து வரும்நபர்ஒருவரால்தாக்கப்பட்டுள்ளார். இது மிகவும் வன்மையாக கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

இந்த நிலையில் தாக்கியவர் இன்னும் கைது செய்யப்படவில்லை. இவ்வாறன செயற்பாடானது ஏனைய எமது கிராம சேவகர்களின் கடமைக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

எனவே இவ்வாறு அநீதிக்கு எதிரான செயற்பாடுகளில் நாங்கள் எவ்வாறு பொருளாதார அபிவிருத்திக்கு வித்திடுவது என்பதான ஒரு கேள்வி இங்கு எழுகிறது. எனவே இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடுபவர்கள் தண்டிக்கப்பட்ட வேண்டும். இதற்கான நீதியும் நியாயமும் நிலை நாட்டப்பட வேண்டும் என்று தெரிவித்தனர்.







இது குறித்துத் தாக்குதலுக்குள்ளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் கிராம உத்தியோகத்தரிடம் இந்தச் சம்பவம் தொடர்பில் வினவிய போது, உலக உணவு திட்டத்தின் கீழ் மக்களுக்காக வழங்கப்பட்டுவரும் உலர் உணவுப் பொதிகளைப் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்ட தகுதியுடையவர்களுக்கு அலுவலகத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை அவற்றைப் பகிர்ந்தளித்து வந்தேன். இதன் போது கிராமத்தில் வசித்து வரும் நபர் ஒருவரால் தாக்கப்பட்டேன் என்று தெரிவித்தார்.





# மனித உரிமைகள் அணுகுமுறை தொடர்பாகப் பயிற்சிப் பட்டறை

(அ.அஸ்வர்)

அம்பாறை மாவட்டத்தை மையமாகக் கொண்டு மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறை தொடர்பான பயிற்சிப் பட்டறை அம்பாறை மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் மனித உரிமைகள் கற்கைளுக்கான நிலையம் மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ஆகியன இணைந்து இதனை முன்னெடுத்தன.

அம்பாறை மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலர்களும் மனித உரிமைகள் அடிப்படையிலான முடிவெடுக்கும் அணுகு முறைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதில் சட்ட உதவி பெறுதல் தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுவர் நிதியத்துடன் இணைந்து நீதி அமைச்சு ஐரோப்பிய ஒன்றிய நிதியுதவியுடன் நீதி ஆதரவு திட்டத்தின் கீழ் இந்த நிகழ்ச்சித் திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம, மாவட்ட மேலதிக செயலாளர் வி. ஜெகதீசன் உட்பட அம்பாறை மாவட்ட பிரதேச செயலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



# அம்பாறை கழிவு மறு சுழற்சி நிலையம் தொடர்பில் ஆராய்வு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மறு சுழற்சி நிலையம் தொடர்பில் அம்பாறை மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டபிள்யூ.டீ.வீரசிங்க ஆராய்ந்துள்ளார்.

அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜயஸ்ரீ அழைப்பின் பேரில் இன்று (14) அந்தப் பகுதிக்கு விஜயம் செய்த அவர், மறுசுழற்சி நிலையம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்தார்.



இதன் போது பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம, உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், முப்படை அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் , அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது அந்தப் பகுதியில் மலைபோல் குவிந்துள்ள குப்பைகளை யானைகள் தினமும் உண்ண வருகின்ற நிலை, இவ்வாறு வரும் யானைகள் சில அருகில் உள்ள பொது மக்களின் சொத்துக்களுக்கும் சேதங்களை விளைவிப்பது, இதனைக் கட்டுப்படுத்த யானை வேலிகள் அமைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கை என்பன தொடர்பில் ஆராயப்பட்டது. இது தவிர நகர சபையின் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான பொறிமுறைத் திட்டங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து இந்தப் பகுதியில் திண்மக்கழிவு கொட்டும் இடத்தில் ஒரு நிறுவனம் இயற்கைப் பசளை தயாரிப்பதற்காக அங்கு பொருத்தப்பட்டுள்ள பாரிய இயந்திரத்தின் மூலம் உரத்தை தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள நிலைமை தொடர்பிலும் ஆராயப்பட்டது.





# பனங்காடு வைத்தியசாலையில் இரண்டு மாடிக் கட்டடம் கையளிப்பு

(றியாஸ் ஆதம்)

உலக வங்கியின் நிதியுதவியில் ஆரம்ப சுகாதார மேம்படுத்தல் திட்டத்தின் ஊடாக பனங்காடு பிரதேச வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டடம் நேற்று திங்கட்கிழமை (13) பாவனைக்காக வைத்தியசாலை நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டது.

வெளிநோயாளர் மற்றும் கிளினிக் பிரிவுகளைக் கொண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டடம் கையளிக்கும் நிகழ்வு பனங்காடு பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் யூ.எல்.எம்.சகீல் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாகவும், முன்னாள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும், தற்போதைய மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருமான டாக்டர் ஜீ.சுகுணன் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வீ.பபாகரன், பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.இல்ஹாம், பிராந்திய ஆயுள்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஏ.நபீல், பனங்காடு வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகளான டாக்டர் எஸ்.குணாலினி, டாக்டர் எஸ்.நௌஷாட், டாக்டர் டிலினி மல்ஷா உள்ளிட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் என பலர் கலந்து கொண்டனர்.

பனங்காடு வைத்தியசாலையின் அபிவிருத்திக்குப் பல்வேறு வழிகளிலும் உதவி செய்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களான வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் மற்றும் டாக்டர் ஜீ.சுகுணண் ஆகியோர் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவால் இந்த நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டனர்.





# ஐ.நா.சமாதானத் தூதுவர் பேரவை உறுப்பினராக நியமனம்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஐக்கிய நாடுகள் சமாதானத் தூதுவர் பேரவையின் அங்கத்தவராக இலங்கை தேசிய ஐக்கியத்துக்கான சர்வமத கூட்டமைப்பின் முஸ்லிம் விவகார சம தலைவர், அஷ் ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல் காதிரி நியமிக்கப்பட்டார்.

ஐக்கிய நாடுகள் சமாதானத் தூதுவர் பேரவையால் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்த நிகழ்வு (03) இடம்பெற்றது.

சர்வதேச சமாதான மாநாடு ஐக்கிய நாடுகள் சமாதான தூதுவர் பேரவையின் தெற்கு ஆசிய செயலாளர் கலாநிதி ஹமிட் ஸைடின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், நியமனச் சான்றிதழை ஐக்கிய நாடுகள் சமாதான தூதுவர் பேரவையின் தெற்கு ஆசிய பிராந்திய சமாதானத் தூதுவர், பேராசிரியர் டாக்டர். ஜி. ஜெகப் ஸைமன் வழங்கினார்.

இந்த நிகழ்வில், சமயத் தலைவர்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் சமாதான தூதுவர் பேரவையின் தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவுக்கான இணைப்பாளர் கலாநிதி தேசமான்ய கே.ஏ.எஸ்.எம்.கே. ரத்னாயக உட்பட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

















# என்.வி.கியூ. கற்கை நெறி மாணவருக்குச் சான்றிதழ்!

(பிரபாகரன் டிலக்சன்)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் என்.வி.கியூ. கற்கைநெறியைப்பூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று (14) இடம்பெற்றது.

இன்று காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் கலாச்சார மண்டபத்தில் தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்., கிளிநொச்சி மாவட்ட பிரதிப் பணிப்பாளர் நிரஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் தலைவர் எயர்மார்சல் (ஓய்வுபெற்ற) பிரசன்னரணசிங்க, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன்பந்து லசேன, யாழ். மாவட்ட அரச அதிபர் சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிறஞ்சன்ஆகியோர் கலந்துகொண்டனர்.

தொழிற்பயிற்சி அதிகார சபையின் என்.வி.கியூ. கற்கை நெறியைப் பூர்த்தி செய்த சுமார் 500 வரையான மாணவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கப்பட்டன.





## தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய கௌரிவிரத இறுதி நாள்!

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய கௌரி விரத இறுதி நாள் பூசைகள் நேற்றுக் காலை 8 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெற்றன.

பூசை வழிபாடுகளை தொடர்ந்து காலை 10 மணியளவில் அடியார்களுக்கு கௌரி நோன்பு நூல் வழங்கப்பட்டது.

## மரண அறிவித்தல்



### திரு.தங்கராஜா துரைராஜா

(Formerly at Lawrie Muthu Krishna & Co., Colombo)

உடுப்பிட்டி வடக்கு கம்பர்மலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை தற்போது குமாரசாமி வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராஜா துரைராஜா அவர்கள் 10.11.2023 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராஜா, தங்கம் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், கமலராணியின் (Former Assistant General Manager, Bank of Ceylon) பாசமிகு கணவரும், கலாநிதி நிராஜ் (Associate Professor, Northumbria University, UK), கலாநிதி நிருஜா (Consultant, US) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராங் (Academic advisor), கலாநிதி பிரணவன் (Senior technical specialist) ஆகியோரின் அன்பு மாமனாரும், கவிகையின் அன்புப் பேரனும் ஆவார்.

அருணகிரிராஜா (Former Deputy Director of Education), சுரேந்திரராஜா (Denmark) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வமகள் (Former Teacher, Vembadi Girls' High School), அம்பிகா (Denmark), சிதம்பரநாதன் (F.C.A), செல்வராணி (US), சண்முகநாதன் (Germany), காலஞ்சென்ற திருச்செல்வநாதன், அனந்தராணி (Canada), சிவனேசநாதன் (UK), ஜீவராணி (UK), மதிவதனராணி (Canada), காலஞ்சென்ற தாமரைச்செல்வி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15.11.2023 புதன்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

35/2,குமாரசாமி வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல் - குடும்பத்தினர்
T.P: - 021 222 1139





# பாரம்பரிய விதை வங்கி திட்டம் அங்குரார்ப்பணம்

(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கிழக்கு மாகாணத்தில் உணவுப் பஞ்சம், நஞ்சுள்ள உணவு ஆகியவற்றைத் தவிர்த்து பொருளாதாரத்தை மேம்படுத்தக் கூடிய வகையில் உள்ளூர் விவசாயிகளை ஊக்கப்படுத்தும் பாரம்பரிய விதை வங்கித் திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

இதற்கென கிழக்கு மாகாணத்தின் 5 பிரதேச செயலர் பிரிவுகளில் 40 கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள பாரம்பரிய உள்ளூர் விவசாயிகளான 200 பயனாளிகள்தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார்.

மட்டக்களப்பு – கதிரவெளி திக்கானை கிராம மட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்காக பாரம்பரிய விதை வங்கியை ஆரம்பித்து விதைத் தேங்காய்கள், தென்னங்கன்றுகள், பயிர் விதைகள் ஆகியவற்றை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (13) இடம்பெற்றது.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் தேவசிகாமணி மயூரனின் பங்குபற்றுதலோடு இடம்பெற்ற இந்த நிகழ்வில் 4 ஆயிரம் விதைத் தேங்காய்கள் நாற்றிடப்பட்டு வாகரைப் பிரதேசத்துக்கான பாரம்பரிய விதை வங்கி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும், பயனாளிகளான 60 விவசாயிகளுக்கு தலா 1500 ரூபா பெறுமதியான கத்தரி, கறிமிளகாய், கீரை, தக்காளி, பீர்க்கு, சிறகவரை, பாகல், பயற்றை, வெண்டி உள்ளிட்ட பாரம்பரிய உள்ளூர் பயிர் விதைகளும் மேலும் 55 பயனாளிகளுக்கு தலா 20 தென்னங்கன்றுகள் வீதமும் வழங்கப்பட்டன.

இந்தத் திட்டத்தை சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு அமைப்பு (வீ எபெக்ற்) கொகாகோலா பவுண்டேஷன், இளைஞர் அபிவிருத்தி அகம் ஆகியவை கூட்டிணைந்து முன்னெடுத்துள்ளன.






## புகைப்படப் போட்டியில் முதலிடம்!

உலக நகர திட்டமிடல் தினத்தை முன்னிட்டு வடமாகாண நகர அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகம் இணைந்து நடத்திய புகைப்படப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற பி. உலகராஜன் பாடசாலை மாணவிக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர சான்றிதழ் மற்றும் பணப்பரிசை வழங்கினார்.

## கொழும்பு சாரணிய நீச்சல் போட்டியில் மருதானை ஸாஹிரா சம்பியனானது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தலைநகரில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பிரபல பாடசாலை சாரணிய குழுக்களுக்கிடையிலான நீச்சல் போட்டியில் தொடர்ச்சியாக நான்காவது தடவையாகவும் கொழும்பு, மருதானை ஸாஹிராக் கல்லூரி சாரணிய அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.






# நீரிழிவு தினத்தில் நடைபவனி!

(அஸ்ஹர் ஆதம்)

உலக நீரிழிவு தினத்தை அனுஷ்டிக்கும் வகையில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையும், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் இணைந்து ஏற்பாடு செய்த விழிப்புணர்வு நடைபவனி இன்று (14) நடைபெற்றது .

இந்த நடை பவனியில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர், நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி, நிந்தவூர் ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர், வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், மற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

தற்போது நீரிழிவு நோயின் தாக்கம் இலங்கையிலும், உலகளாவிய ரீதியிலும் அதிகரித்து வருகிறது. இந்த நோயை முன் கூட்டியே இனங்கண்டு சிறந்த முறையில் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்வதன் மூலம் ஆரோக்கியமாக வாழலாம். நோயின் அறிகுறி, அதனால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் அதைக் கட்டுப்படுத்தும் வகையிலான நடைமுறைகள், நீரிழிவு நோயாளிகளுக்கான சிபாரிசு செய்யப்பட்ட உணவு வகைகள் எவை என்பது தொடர்பில் பிரசுரமொன்றும் இந்த நடைபவனியின் போது விநியோகிக்கப்பட்டது .





# மன்னாரில் கடும் மழை; மக்களின் இயல்பு பாதிப்பு!



(மன்னார் நிருபர்)

தென் மேற்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாக்கம் காரணமாக இலங்கை முழுவதும் சீரற்ற காலநிலை நிலவி வருகிறது.

இதனால் மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்துவரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. தாழ்நில கிராமங்கள் பல நீரில் மூழ்கியுள்ளன.

நேற்று திங்கட்கிழமை காலை முதல் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. அன்றாட செயற்பாடுகளைச் செய்ய முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

மக்கள் வீடுகளை விட்டு வெளியில் செல்ல முடியாத நிலையும் காணப்படுகிறது. பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன. பல வீடுகளில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை நீடிக்கும் பட்சத்தில் தாழ்நில கிராம மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


सत्यमेव जयते
இந்திய துணைத் தூதரகம்
யாழ்ப்பாணம்
நல்லதோர் குடும்பம்
சிறப்புரை
திரு. மோகனசுந்தரம்
நகைச்சுவை பேச்சாளர்
இடம் : யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையம்
காலம் : 18 நவம்பர் 2023 (சனிக்கிழமை)
நேரம் : மாலை 05.00 மணி
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அனுமதி இலவசம்


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
+94 703 563213
+94 21 222 8358
www.jride.lk
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
நாங்கள் தயார் நீங்கள் தயாரா?
WE ARE READY ARE YOU READY?
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள். இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VAN RENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882



# காசா இனவழிப்பு முற்றுகையும் பேச்சுரிமை மறுக்கப்படும் பாலஸ்தீனரும்!

நாற்பது நாள்களை எட்டும் பாலஸ்தீன காசா மீதான இஸ்ரெயிலின் முற்றுகைப் போரின் மனிதகுல விரோதக் குற்ற விளைவுகள், முன்னெப்பொழுதும் இல்லாதவாறு பெருவாரியான உலக நாடுகளையும் ஐக்கிய நாடுகள் சபையையும் உலுப்பிப் போட்டுள்ளன. இஸ்ரேலுடனான தமது இராஜதந்திர உறவுகளை மீளப்பெற வைத்துள்ளன. போர்க் குற்றங்களும் மனித உரிமை மீறல்களும் கட்டுமீறிப் போனதால் இஸ்ரேல் பற்றிய தமது மதிப்பீடுகளை மீளாய்வுக்கு உட்படுத்தும் நிலைக்கு அந்த நாடுகள் உந்தப்பட்டுள்ளன.

கடந்த ஒக்ரோபர் 7 முதல் நவம்பர் 12 வரையான காலப் பகுதியில் வான் வழியாகக் காசாவுக்குள் 32,000 தொன்களுக்கும் அதிக வெடி பொருள்கள், குண்டுகளாகவும் ஏவுகணைகளாகவும் இஸ்ரேல் படையினரால் வீசப்பட்டன. மருத்துவமனைகள், மசூதிகள், பாடசாலைகள், குடியிருப்புக்கள் தகர்க்கப்பட்டன. அங்கு, 50 வீதமான கட்டடங்கள் அழிந்துள்ளன. இதன் பெறுமதி 56 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 11,000 இற்குமதிகமான குடிமக்கள் பலியானதுடன் படுகாயமடைந்தோர் தொகையும் 35,000 ஐக் கடந்தது. கொல்லப்பட்டவர்களுள் அரைவாசிக்கும் அதிகமானோர் சிறுவர்களும் பெண்களுமே.

காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் – ஸிபா மீது தொடர் குண்டு வீச்சுக்களைத் தீவிரப்படுத்தியுள்ளது. இஸ்ரேல் பாதுகாப்புப் படையால் அங்குள்ள மூன்று பிரதான மருத்துவமனைகள் தாக்கப்பட்டதில் இருபதுக்கு மேற்பட்டோர் பலியானதுடன், அவை உட்பட மொத்தமுள்ள 35 மருத்துவமனைகளுள் 18 செயற்பட முடியாது முடக்க நிலையில் உள்ளன.

குடிதண்ணீர், உணவு, மின்சாரம், எரிபொருள், மருந்து மற்றும் தொலைத் தொடர்பு விநியோகத் தடைகள் நீடிக்கும் இந்த நிலையில் வடக்கு காசாவில் தொடரும் ஹமாஸ் – இஸ்ரேல் இராணுவக் கடுஞ்சமரால் இடம்பெயரும் 15 லட்சம் பாலஸ்தீனர்களும் தெற்கு நோக்கி ஓட்டமும் நடையுமாகவும் குதிரை வண்டிகளிலும் சாரை சாரையாக வந்தடைகின்றனர். தெற்குக் காசாவிலும் இஸ்ரேல் படையினர் சரமாரியாகக் குண்டுகளை வீசுவதால் கொல்லப்படுவோர் தொகை மேலும் அதிகரிக்கின்றது. இடம்பெயர்வோர், நீர் வரத்துத் தடையால் அசுத்தமான கடல் நீரையே உபயோகிக்கின்றனர்.

இந்த அவலநிலை காசாப் பாலஸ்தீனர் மீது தொடரும் நிலையிலும், “ போர் முடிவில் கைப்பற்றப்படும் காசாவின் பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் எங்களால் முன்னெடுக்கப்படும்” என்று அடித்துக் கூறுகின்றார் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு. பதிலுக்கு, “ இஸ்ரேல், காசாவை மீள் ஆக்கிரமிப்புச் செய்ய முடியாது “ என்கின்றனர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் வெளிவிவகாரச் செயலர், பிளிங்டனும்.

இத்தகைய வேறுபட்ட கருத்துக்கள் இருப்பினும் அமெரிக்காவின் ஆதரவு தமக்கிருப்பதாக நம்பும் இஸ்ரேல், சர்வதேச எதிர்ப்புகளையும் மீறிக் காசா மீது தொடர் குண்டுவீச்சுத் தாக்குதல்களை அதிகரித்தே செல்கின்றது. இதே நேரம், கடந்த 8 ஆம் திகதி தென்னாபிரிக்க வெளிவிவகார அமைச்சர், காசா மீது இஸ்ரேல் மேற்கொண்டு வரும் போர்க் குற்றங்கள் தமக்குத் தமது முன்னைய நிறவெறி ஆட்சியாளர்களை நினைவூட்டுவதாகவும் இந்த இராணுவ நடவடிக்கைகள் தொடர்பில் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் அணுகுமுறை அதன் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள் ளார்.

இஸ்ரேலின் இத்தகைய போர்க்குற்ற, மனித உரிமை மீறலை எதிர்த்துத் தமது இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொண்ட தென்னமெரிக்க நாடுகளான பொலிவியா, சிலி, கொலம்பியா வரிசையில் தற்போது மேற்கு ஐரோப்பிய நாடுகளான ஸ்பெயின் மற்றும் பெல்ஜியம் அணிவகுத்து நிற்கின்றன. இஸ்ரெயிலுக்கு எதிரான தமது கடும் கண்டனங்களை அந்த நாடுகள் வெளிப்படுத்தியுள்ளன. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்ற விசாரணைக்கு இஸ்ரேலை உட்படுத்துமாறும் ஸ்பெயின் கோரி நிற்கின்றது.

அமெரிக்காவில் ஒரு லட்சம் சனத்திரளின் ஆர்ப்பாட்டப் பேரணி, பாலஸ்தீன ஆதரவுப் போராட்டங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளையும் மீறிப் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனியில் இடம்பெறும் மாபெரும் மக்கள் போராட்டங்கள், இந்தோனேசியா மற்றும் அரபு நாடுகளின் வெகுஜன எழுச்சிகள், தென்னாபிரிக்கா மற்றும் ஆபிரிக்க நாடுகளின் மக்களால் முன்னெடுக்கப்படும் பாலஸ்தீன ஆதரவு ஊர்வலங்கள், குறிப்பாக, சர்வதேசப் போர் நிறுத்த தினமான நவம்பர் 11, காசாவில் உடனடி யுத்த நிறுத்தத்தைக் கோரி, பிரித்தானியத் தலைநகர் லண்டனில் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட 3,00,000 பேர் கலந்துகொண்ட மாபெரும் பாலஸ்தீன ஆதரவு ஆர்ப்பாட்டப் பேரணி என்பன ஐ.நா.பொதுச் சபையில் 120 நாடுகளின் ஆதரவுடன் ஒக்ரோபர், 27 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட ‘காசாவில் உடனடி மனிதாபிமானப் போர்நிறுத்த’ தீர்மானத்துக்கு வலுச் சேர்ப்பவையே.

அத்துடன், சவூதியில் 11 ஆம் திகதி இடம்பெற்ற அரபு லீக் மாநாட்டில், பாலஸ்தீனர்களுக்கு எதிரான, காட்டுமிராண்டித்தனமான, இஸ்ரேல் அரசால் முன்னெடுக்கப்படும் தாக்குதல்களை வன்மையாகக் கண்டித்தும் உடனடிப் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

சுதந்திரப் பாலஸ்தீன இறையாண்மைக்கு ஆதரவாக அரபு நாடுகளால் ஒருமித்து வெளியிடப்பட்ட தீர்மான

(17ஆம் பக்கம் பார்க்க)

# காசா இனவழிப்பு முற்றுகையும் பேச்சுரிமை மறுக்கப்படும் பாலஸ்தீனரும்!

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகவே இது இப்பொழுது சர்வதேசத்தால் நோக்கப்படுகின்றது.

“காசா நிலைவரம் கவலையளிப்பதாக உள்ளது. ஹமாஸ் இயக்கத்தின் தலைவரைக் கொன்றுவிடுவதால் மட்டும் பிரச்சினை தீர்ந்து விடாது. உடனடிப் போர் நிறுத்தம் ஒன்றுக்கு வருவதே சிறந்தது. மற்றையவை பேசித் தீர்க்கலாம்” என இலங்கை ஜனாதிபதி, ரணில் விக்ரமசிங்க அவர்கள் தெரிவித்துள்ளமையும் முக்கியத்துவமானது.

பாலஸ்தீனர் மீதான போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் அதிகரித்துச் செல்வது ஒருபுறமிருக்க, மறுபுறம் ‘புதிய சமூக ஊடகப் பாதுகாப்புத் திருத்தச் சட்டம்’ ஒன்றை அமுலாக்கியுள்ளது இஸ்ரேல் அரசு. இதன்மூலம் இஸ்ரேல் ஆட்சிப் பரப்புக்குள் வாழும் மக்கள் தொகையுள் 20வீதமான, 12 லட்சம் பாலஸ்தீனர்கள் தமது பேச்சுரிமை, கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றை அடியோடு இழப்பதோடு, சிறையிலடைபடும் அவல நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

இது காசா மற்றும் மேற்குக்கரை வாழ் பாலஸ்தீனர்களுக்கும் பொருந்தும். இப்புதிய சட்ட மூலத்தின் கீழ் கைதாவோர் அனைவரும் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்படுவர். இந்தச் சட்டம் அமுலுக்கு வந்த மறுநாளன்று (நவம்பர், 9), இஸ்ரெயிலினுள் வசிக்கும் பாலஸ்தீனக் குடும்பப் பெண்மணி ஒருவர் அவரது வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். அவரது கைபேசியில் வந்த செய்தி ஒன்றை வாசித்து அதற்கு ‘லைக்’ செய்ததே அவர் மீதான குற்றச்சாட்டு.

ஏற்கனவே அமுலில் உள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் திருத்தப்பட்ட இப்புதிய பிரிவு, “பயங்கரவாத உள்ளடக்கம் கொண்ட தகவல்கள், செய்திகளை நுகர்வது குற்றவியல் தண்டனைக்குரியது” என்னும் சரத்தை அறிமுகப்படுத்துகின்றது.

ஹமாஸின் திடீர் வன்தாக்குதல் தெற்கு இஸ்ரேலில் இடம்பெற்று 32 ஆவது நாளில், இஸ்ரேலிய நாடாளுமன்றமான ‘க்னெசெற்’ இன் நவம்பர், 8 ஆம் திகதிய அமர்வில், 13 - 4 என்கின்ற பெரும்பான்மையுடன், நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தின் 24 ஆவது பிரிவின் கீழ், “பயங்கரவாத அமைப்புகள் என்று இனங் காணப்பட்ட அமைப்புகளின் வெளியீடுகளை, ஒழுங்கமைக்கப்பட்ட தொடர்ச்சியான நுகர்தலுக்கு உட்படுத்துதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றவியல் தண்டனைக்கு உரியதாகும்” என்னும் இந்தத் திருத்தம் சட்டமாக்கப்பட்டது.

இதில், குற்றவியல் தண்டனைக்குரிய பயங்கரவாத அமைப்புகளாகத் தற்சமயம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளவை, பாலஸ்தீன விடுதலைப் போராட்ட அமைப்பான ஹமாஸ் மற்றும் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆகியவையே. அத்துடன், இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சு மற்றும் ‘க்னெசெற்’ அவையின் அரசியல் யாப்பு, சட்டத்தின் அனுமதியுடன் நீதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளுடன் மேலும் பல அமைப்புகளைப் பட்டியலிட, இஸ்ரேல் நீதியமைச்சருக்குச் சிறப்பு அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

“பயங்கரவாத வெளியீடுகளை நுகர்வுக்கு உட்படுத்துதல்” குற்றத்தின் கீழ் கைதாவோர் ஒருவருட அதி கூடிய கடுழியச் சிறைத் தண்டனையை அனுபவிப்பர். “இது தனிமனித சிந்தனை, நம்பிக்கை மற்றும் சுதந்திரத்துக்கு எதிரானதும் இரும்புக் கரம் கொண்டு அடக்கும் நாசகார, அடக்குமுறைச் சட்டமாகும். சாதாரண சமூக வலைத்தளப் பயனாளியான ஒவ்வொரு பாலஸ்தீனரையும் அவர்களது பேச்சுச் சுதந்திரத்தையும் குறிவைத்து முடக்கும் நோக்கிலானது” என்கின்றார் இஸ்ரேலிய அரபுச் சிறுபான்மையினர் சட்டமையத்தின் தலைவர் அடல்லா. அத்துடன், “ஜனநாயக நாடுகளில் இதே போன்ற சட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. இதனை இங்கு நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் இதன் வாசக அர்த்தத்தை எவ்வாறும் தமக்குச் சாதகமாக வளைக்கலாம்” என்று குற்றஞ் சாட்டுகின்றது இஸ்ரே லின் குடிமக்கள் உரிமைக்கான குழு மம்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் மேற்கொண்ட ஒக். 7 திடீர்த் தாக்குதல் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் கருத்துப் பகிர்ந்த, இஸ்ரேலினுள் வாழும் பாலஸ்தீனியர்கள் பலர் தமது பணிகளிலிருந்தும் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளிலிருந்தும் நீக்கப்பட்டனர். அத்துடன் கைதுக்கான அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டனர். தற்பொழுது அமுல்படுத்தப்பட்டுள்ள, சமூக ஊடகம் சார்ந்த இப்புதிய பயங்கரவாதத் தண்டனைச் சட்டமானது இஸ்ரேலினுள் வாழும் பாலஸ்தீனக் குடிமக்களை மட்டுமல்ல, ஆக்கிரமிக்கப்பட்ட காசா மற்றும் மேற்குக் கரை வாழ் பாலஸ்தீனரையும் அவர்கள் குரல்வளையையும் நசுக்கும்.

சாரதா

# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வு





சந்நிதியான் ஆச்சிரமத்தில் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்ற வாராந்த நிகழ்வில் 46 அயிரத்து 500 ரூபா பெறுமதியான சைக்கிள் அச்சுவேலி பிரதேசத்தை சேர்ந்த கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியா லயத்தில் தரம் - 5 இல் கல்வி கற்கும் மாணவனுக்கு வழங்கப்பட்டது.


இளைப்பாறிய கிராம சேவை யாளர் சிவநாதன் திருமுறைகளும், நாயன்மார்களும் என்ற தொனிப் பொருளில் அறிவுரையாற்றினார்.

இறைதத்துவம் என்ற தொனிப் பொருளில் இளைப்பாறிய அதிபர் ஆ. சிவநாதனின் சொற்றொடர் இடம் பெற்றது.

நிகழ்வில் செயற்றிட்ட உதவிக ளும் வழங்கப்பட்டன.

உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள் வழங்கினார்.

# நீரிழிவு நோயாளரின் எண்ணிக்கை இந்தியாவில் 20 கோடியை எட்டும்




இன்று உலக நீரிழிவு நோய் தினம். நீரிழிவு நோயைப் பொறுத்தவரை இது நாள்பட்ட நோய். இது வந்தாலே வாழ்க்கை முழுவதும் மருந்து மாத்திரையோடுதான் வாழ வேண்டிய சூழ்நிலை.

இந்த வியாதி வந்தால் கண் பார்வையிழப்பு, சிறுநீரக பாதிப்பு, மாரடைப்பு, பக்கவாதம் ஆகியவை வருவதற்கான வாய்ப்பு அதிகம் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது.

இந்தியாவில் சுமார் 10 கோடி பேருக்கு நீரிழிவு உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை அடுத்த 20 ஆண்டுகளில் இரு மடங்காகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வாழ்க்கை முறையில் மாற்றங்களை செய்யாவிட்டால் டைப்-2 நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று கூறி உள்ளார்கள்.

இந்திய உணவுகளைப் பொறுத்தவரை சர்க்கரை, கார்போ ஹைட்ரேட் அதிகம் உள்ள உணவுகளே புழக்கத்தில் உள்ளன. எனவே உணவு விசயத்தில் கவனமும், உணவு கட்டுப்பாடும் அவசியம்.

உலக அளவில் உறுதி செய்யப்படும் 7 நீரிழிவு நோயாளர்களில் ஒருவர் இந்தியராக இருக்கிறார்கள்.

19 வயதுக்குட்பட்டவர்களில் 5 பேரில் ஒருவருக்கு டைப்-1 வகை சர்க்கரை வியாதி இருக்கிறது.டைப்-1ஐ பொறுத்தவரை உடலில் உள்ள நோய் எதிர்ப்பு அமைப்புகள், கணையத்தில் உள்ள இன்சுலின் உற்பத்தி செய்யும செல்களை சேதப்படுத்துகின்றன. இவர்களுக்கு தினமும் இன்சுலின் ஊசி போட வேண்டும்.

டைப்-2 வகையை பொறுத்தவரை தடுக்க முடியும். அதற்கு சீரான உணவை சாப்பிடுவது, தினமும் உடல் பயிற்சிகளில் ஈடுபடுவது போன்ற வாழ்க்கை முறை மாற்றங்கள் ஆபத்தை வெகுவாக குறைக்கும் என்கிறார்கள்.

மக்கள் தொகை அடிப்படையில் கோவாவில் 26.4 சதவீதமும், புதுவையில் 26.7 சதவீதமும் உள்ளது. தமிழகத்தில் 14.4 சதவீதத்தினரும் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். வாழ்க்கை முறை, உணவு முறையில் ஏற்படுத்தும் மாற்றங்கள்தான் நீரிழிவு நோய் வருவதைக் கட்டுப்படுத்தும்.

# இந்தியாவுக்குள் ஊடுருவிப் பறந்த பாக். ட்ரோன் சுட்டு வீழ்த்தப்பட்டது



பஞ்சாப் மாநிலம் பெரோஸ்பூர் திண்டிவாலா கிராம பகுதியில் இந்திய எல்லைக்குள் ஆளில்லா டிரோன் பறந்தது. இதை பார்த்த எல்லைப்பாதுகாப்பு படைவீரர்கள் அந்த ட்ரோனை சுட்டு வீழ்த்திச் செயல் இழக்கச் செய்தனர்.

விசாரணையில் பாகிஸ்தானில் இருந்து போதை பொருள்கள் கடத்தல் கும்பல் இந்த ட்ரோனை அனுப்பி வைத்திருந்தது தெரியவந்தது.

கடந்த ஒரு வாரத்தில் மட்டும் ட்ரோன்கள் இந்திய எல்லைக்குள் அத்துமீறி பறந்தது இது 3 ஆவது முறையாகும்.

இதில் ஒரு ட்ரோன் சீனாவில் தயாரிக்கப்பட்டது ஆகும்.

# அடுக்குமாடிக் கட்டடத்தில் தீ! தெலுங்கானாவில் 9 பேர் பலி!!



தெலுங்கானாவின் ஐதராபாத் நகரில் நம்பள்ளி பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் பல குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்நிலையில், திடீரென நேற்று அந்தக் குடியிருப்பில் தீ விபத்து ஏற்பட்டது. கட்டடம் முழுவதும் கரும் புகை பரவியது.

இந்த சம்பவத்தில் பலருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது. பலர் சுயநினைவை இழந்தனர். இதில், 2 குடும்பங்களை சேர்ந்த 9 பேர் உயிரிழந்து உள்ளனர். அவர்களில் 2 சிறுமிகள், 4 பெண்களும் அடங்குவர்.

மொத்தம் 21 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். முதல்கட்ட விசாரணையில், டிரம் ஒன்றில் வைத்திருந்த இரசாயனப் பொருள்கள் தீப்பிடித்து, கட்டிடத்தில் பரவியது என பொலிஸார் கூறுகின்றனர்.

இந்தத் துயர சம்பவத்திற்கு தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் மற்றும் முதலமைச்சர் சந்திரசேகர ராவ் இரங்கல் தெரிவித்தனர். உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கப்படும் என முதலமைச்சர் அறிவித்து உள்ளார்.

# காசாவின் கட்டுப்பாட்டை ஹமாஸ் இழந்து விட்டது!

## இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்



டெல் அவிவ்,நவ.14

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான மோதல் ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில், வடக்கு காசா பகுதியில் அமைந்துள்ள பெரிய மருத்துவமனையான அல்-ஷிபா மீது இஸ்ரேல் ராணுவம் தொடர்ந்து தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது.


இதனால், அந்த மருத்துவமனையில் மருத்துவ சேவை வழங்கப்படவில்லை. இதன் தொடர்ச்சியாக நோயாளிகள் சிகிச்சை கிடைக்காமல் தவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், இஸ்ரேல் பாதுகாப்பு மந்திரி கேலன்ட் விடுத்துள்ள வீடியோ செய்தியொன்றில், காசாவின் கட்டுப்பாட்டை ஹமாஸ் பயங்கரவாத அமைப்பு இழந்து விட்டது. பயங்கரவாதிகள் தெற்கு நோக்கித் தப்பியோடுகின்றனர். ஹமாஸ் அமைப்பின் மையங்களைப் பொதுமக்கள் சூறையாடி வருகின்றனர் என கூறினார்.

எனினும், அதற்கான சான்று எதனையும் அவர் வெளியிடவில்லை. ஹமாஸ் அமைப்பின் அரசு மீது பொதுமக்களுக்கு நம்பிக்கை இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# காசாவின் மருத்துவமனை பாதுகாக்கப்பட வேண்டும்

## ஜோ பைடன் வலியுறுத்தல்



இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையேயான மோதல் ஒரு மாதத்திற்கும் மேலாக தொடர்ந்து நீடித்து வருகிறது. இந்த நிலையில், வடக்கு காசா பகுதியில் அமைந்துள்ள பெரிய மருத்துவமனையான அல்-ஷிபா மீது இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. இதனால், அந்த மருத்துவமனையில் மருத்துவ சேவை வழங்கப்படவில்லை.

இதன் தொடர்ச்சியாக நோயாளிகள் சிகிச்சை கிடைக்காமல் தவித்து வருகின்றனர். இந்த மருத்துவமனையை இஸ்ரேல் இராணுவ வீரர்கள் நாலாபுறமும் சுற்றி வளைத்துள்ளனர். 400 பேர் சிகிச்சை பெறும் நிலையில், புலம்பெயர்ந்த 20 ஆயிரம் பேர் மருத்துவமனை வளாகத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

மேலும், தீவிர சிகிச்சை பிரிவுக்கான ஆக்சிஜன் உபகரணங்களின் பணிகள் நிறுத்தப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது. இதனால், 7 குழந்தைகள் மற்றும் 27 நோயாளிகள் வரை உயிரிழந்து விட்டனர் என ஹமாஸ் அமைப்புக்கான துணை சுகாதார மந்திரி யூசுப் அபு ரிஷ் கூறியுள்ளார்.

மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு பல்வேறு தரப்பினர் கடும் கண்டனம் தெரிவித்த நிலையில், சர்வதேச விதிகளின்படி மருத்துவமனைகளில் பயங்கரவாதிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினால், மருத்துவமனைகள் மீதும் தாக்குதல் நடத்தலாம் என இஸ்ரேல் பாதுகாப்புப்படை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் செய்தியாளர்களிடம் பேசுகையில், “மருத்துவமனைகள் மீதான தாக்குதல்கள் குறையும் என்று நான் நம்புகிறேன். இஸ்ரேல் அரசாங்கத்துடன் நாங்கள் தொடர்பில் உள்ளோம். பிணைக்கைதிகளை விடுவிப்பது தொடர்பாக பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. எனவே நல்ல முடிவு கிடைக்கும் என நம்பிக்கை உள்ளது. அதே சமயம் மருத்துவமனைகள் கட்டாயமாக பாதுகாக்கப்பட வேண்டும்” என்று தெரிவித்தார்.

# காசா மருத்துவமனைக்கு அடியில் சுரங்கத்தில் ஹமாஸ் பதுங்கலாம்

## இஸ்ரேல் இராணுவம் குற்றம்சாட்டு



ஹமாஸ் தீவிரவாதிகளைக் குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் காசாவில் தாக்குதல் நடத்தி வருகிறது. மருத்துவமனைக்கு அடியில் சுரங்கம் அமைத்து ஹமாஸ் அமைப்பினர் பதுங்கி இருக்கின்றனர் என இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறது.

ஆனால் பாலஸ்தீன அரசு, மனிதாபிமான உதவிகள் செய்து வரும் அமைப்புகள், ஹமாஸ் போன்றவை இந்தக் குற்றச்சாட்டை மறுத்தன.

ஹமாஸ் தீவிரவாதிகள் சுரங்கம் அமைத்து பதுங்கியுள்ள நிலையில் – பிணைக்கைதிகளை பிடித்து வைத்துள்ளனர் என்று இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து கூறி வந்த நிலையில் – காசாவில் உள்ள ரன்டிசி மருத்துவமனையின் அடித்தளத்தில் சுரங்கபாதை அமைத்து ஹமாஸ் அமைப்பினர் மறைந்திருந்ததற்கான ஆதாரமாக 6 நிமிட வீடியோ ஒன்றை இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டுள்ளது.

இந்த வீடியோவில் தரைமட்டமாக்கப்பட்ட ஒரு கட்டடத்தில் ஒரு சுரங்கபாதையின் வழியை அதிகாரி ஒருவர் கண்டுபிடித்து, அந்த சுரங்கத்தின் வழியே உள்ளே செல்கிறார். இந்த சுரங்கத்தின் மறுபக்க வழி ரன்டிசி மருத்துவமனையில் திறக்கப்படுகிறது என அவர் விளக்குகிறார்.

இதுபோன்றுதான் அல்-ஷிபா மருத்துவமனையிலும் உள்ளது என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்து வருகிறது.